## தி. மு. க. மகளிர் அணி

# ஒன்றிய, நகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

### தி.மு.க மகளிர் அணிச் செயலாளர் ஹெலன்டேவிட்சன் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி, மாவட்டப் பொறுப்பாளர் ஒப்புதலோடு நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட தி.மு.க. மகளிர் அணியின் ஒன்றிய, நகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

## நாமக்கல் மேற்கு மாவட்டம்

### திருச்செங்கோடு வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - ம. மோகனசுந்தரி 6/221, குட்டிமேயக்கன்பட்டி, ஒ. ராஜபாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ரா. பிரியா நாடார் தெரு, கணக்கம்பட்டி, வட்டூர், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் - 637205. 2) ச. கவிதா 5/550, கந்தசாமி நகர், தேவனாங்குறிச்சி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் - 637209. 3) மு. லட்சுமி திருநகர் காலனி, கருவேப்பம்பட்டி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் - 637304. 4) பி. காயத்திரி தி. நெய்காரபட்டி, சின்னதம்பிபாளையம் அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் - 637209.

### திருச்செங்கோடு தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - யு. சவிதா 2/102, குடித் தெரு, ஊஞ்சபாளையம், ஆண்டிபாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ரா. சரண்யா 3/272, பில்லிகக்மேடு, சிக்கநாயக்கன்பாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 2) க சங்கீதா 1/226/எஅ. தெரு, அத்திபாளையம், சிறுமொளசி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 3) த. திவ்யா 1/144, எம்.ஜி.ஆர். நகர் காலனி, எஸ். இறையமங்கலம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 4) கோ. பழனியம்மாள் 3/105எ, பிரிதி, அத்திபாளையம், பன்னீர்குத்திபாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 5) சு. நிர்மலாதேவி 2/527எ, எம்.ஜி.ஆர். நகர், மொளசி அஞ்சல், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

### கபிலர்மலை வடக்கு ஒன்றியம்

அமைப்பாளர் - சு. வளர்மதி 2/208, மெயின் ரோடு, சோழசிராமணி, பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637210.

துணை அமைப்பாளர்கள் - 1) கி. வனிதா பச்சாகவுண்டன் வலசு, சோழசிராமணி, பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637210. 2) டி. அபிராமி 3/62-டி, சுள்ளிக்காடு, ஜமின்இளம்பள்ளி, பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் - 637210. 3) செ. கோகிலா 1/45, சந்தப்பேட்டை, சோழசிராமணி, பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637210. 4) எஸ். கவிதா 6/82-இ, நல்லகவுண்டம்பாளையம், ஜமின் இளம்பள்ளி, பரமத்தி வேலூர், நாமக்கல் - 627210. 5) எம். பிரியா 6/65, டி-இ, நல்லகவுண்டம்பாளையம், ஜமின் இளம்பள்ளி, பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637210. 6) கு. தாமரைசெல்வி 1/112, மீனவர் தெரு, சோழசிராமணி, பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் - 637210.

### கபிலர்மலை மத்திய ஒன்றியம்

அமைப்பாளர் - மு. செல்வி 2/265ஏ, வேட்டுவம்பாளையம், கபிலக்குறிச்சி கிராமம், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637204.

துணை அமைப்பாளர்கள் - 1) எஸ். மாதேஸ்வரி 12/7, காளிபாளையம். ஜேடர்பாளையம் அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637213. 2) ஜி. தங்கமணி 11/21, குடித் தெரு, கவுண்டம்பாளையம், திடுமல் அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637204. 3) ஜி. சத்யா 1/191, ஆவரங்காடு, திடுமல் அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637204. 4) எஸ். பூங்கொடி 1/106, பெருச்சாகவுண்டம்பாளையம், சிறு நல்லிகோவில் அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் - 637213. 5) எம். சுகுணா 2/61ஏ, பெரியசோளிபாளையம், பெரியசோளிபாளையம் அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637204.

### கபிலர்மலை தெற்கு ஒன்றியம்

அமைப்பாளர் - எம். கலையரசி 3/78பி, பொன்முருகன் நகர், தெற்கு வலசுப்பாளையம், இருக்கூர் அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637204.

துணை அமைப்பாளர்கள் - 1) வி. இந்துமதி அருந்ததியர் தெரு, பஞ்சப்பாளையம், இருக்கூர் அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 637204. 2) பி. பரமேஸ்வரி முனியகவுண்டம்பாளையம், பாண்டமங்கலம் அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம். நாமக்கல் - 637208. 3) எஸ். தீபா சேளூர் செல்லப்பம்பாளையம், அருந்ததியர் தெரு, சேளூர் அஞ்சல், பரமத்தி வேலூர் (வ), நாமக்கல் - 632208. 4) எஸ். குப்பாயி புங்கம்பாளையம், அருந்ததியர் தெரு, பாண்டமங்கலம் அஞ்சல், பரமத்தி வேலூர் வட்டம், நாமக்கல் - 627208. 5) எஸ். மணிமேகலை 2/214, நல்லாக்கவுண்டம்பாளையம், பிலிக்கல்பாளையம் அஞ்சல், பரமத்திவேலூர் வட்டம், நாமக்கல் - 637213.

### திருச்செங்கோடு கிழக்கு நகரம்

அமைப்பாளர் - பி. காமதேனு 263, சொறியம்பறை வீதி, செங்கோடம்பாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) வி. மலர்விழி, 40, எ.கே. இ. ரோடு - 1, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 2) எஸ். ரேவதி 123/77, டாக்டர். அம்பேத்கர் நகர், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 3) பி. உத்ரா 258, நாகர்பள்ளம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 4) ஜி. புஷ்பா 149, செங்கோடம்பாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 5) எஸ். செல்வி மலைசுத்திரோடு, மலையடிக் குட்டை, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

### திருச்செங்கோடு மேற்கு நகரம்

அமைப்பாளர் - கோ. கோமதி 146/6, தெ, 1, வில்லைகாட்டுப்பாவடி, சூரியம்பாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) ந. மலர்கொடி 59/9-1, லட்சுமி நகர், மாங்குட்டைபாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 2) எம். தேவகி 1/1-10, டி.என்.எச்.பி. காலனி, கொல்லப்பட்டி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 3) ச. கலையரசி 49/13சி, வீடில்லாதோர் சங்க காலனி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 4) க. இளவரசி 118-1, அருந்ததியர் தெரு, கொல்லப்பட்டி, திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம். 5) வி. சத்யா 6/பீ/1, 5 வது தெரு, இராஜா கவுண்டம்பாளையம், திருச்செங்கோடு வட்டம், நாமக்கல் மாவட்டம்.


"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 22-12-2025.

**ஹெலன் டேவிட்சன்**
செயலாளர்
தி.மு.க மகளிர் அணி

---

### உதயசூரியனுக்கு வாக்களித்து

# சமநீதி தழைத்திட வழி செய்யுங்கள் வாக்காளர்களே!



**நா**வடக்கம் நல்ல அரசியல் தலைவருக்கான குணாதிசயம்.....! சினிமா மக்களை நம்ப வைக்கும் ஒரு நிழல் கூத்து. அரசியல் மக்கள் வாழ்க்கையை நல்ல பல திட்டங்கள் மூலம் இயக்கி வைக்கும் நிஜக் கூத்து! இவரோ அரசியலில் புதுமுகம் ! சினிமாவில் புகழ் முகம்!....

பல வருட கடின உழைப்பு, தியாகம், கடமை, விடாமுயற்சி, கட்டுப்பாடு, முடிவெடுக்கும் திறமை, வழிநடத்தும் வல்லமை. இப்படி பல நல்ல குணாதிசயங்கள் தலைவராக இருப்பவர் முதல்வராக வருவதற்கு தேவையானவை! தீய சக்தி என எம்.ஜி.ஆரும்... ஜெயலலிதாவும் சொன்னதற்கு காரணம் உண்டு. அவர்கள் பாதிக்கப்பட்டார்கள். ஆனால் இவரோ நல்ல சக்தியா? தீய சக்தியா? என்பதனை இன்னமும் மக்களுக்கு நிரூபிக்கவில்லையே! எடுத்த எடுப்பிலேயே 41 உயிர் பலி ஆகி இருக்கிறது? இவரை களப்பலி நாயகன் என விரும்பாதவர்கள் சொல்லிவிட வாய்ப்பிருக்கிறது!

ஒரு தீய சக்தியை ஆட்சியில் ஆறு முறைகள் அமர வைக்க தமிழ் மக்கள் என்ன முட்டாள்களா? கல்யாணம் ஆகாத ஒரு கன்னிப் பெண் தாலாட்டுப் பாடுவது போல். அரங்கேற்றம் ஆவதற்கு முன் நடிகர் அடுத்தவர்களை வசை பாடுவது கேவலம் இல்லையா?

2026 தேர்தல் நமது தாயகம் இந்துஸ்தானா? இந்தியாவா? என்பதை முடிவு செய்ய வைக்கப்படும் முதல் புள்ளி. தேசத்தில் சனாதன சன்மார்க்க அரசியல் நீடிப்பதா? சமநீதி தரும் திராவிட அரசியல் மலர்வதா என்பதை நிர்ணயிக்கும் முதல் படி.

எப்போதும் விந்தியத்தை தாண்டி வராத ஆரியம் தற்போது மயிலாப்பூரில் கிளை அமைத்து டெல்லி ஷாக்களின் உத்தரவுகளை நம்மவர் சிலரின் துணையோடு செயல்படுத்துவது தவறானது என்பதனை நிரூபிக்க வேண்டிய தேர்தல். சுருக்கமாகச் சொன்னால் நாடாளுமன்றத்தில் செங்கோல் அகற்றப்பட்டு நாடாளுமன்ற வாசலில் ஆராய்ச்சி மணி கட்டப்படும் நிலைமையை உருவாக்கப் போகும் தேர்தல். கட்சிகளை மறப்போம்; ஜாதிகளை ஒழிப்போம்; மதங்களை மறந்து இந்தியாவை காப்போம்... ஜனநாயகத்தை மீட்போம்!

ஆடாத ஒரு ஆட்டக்காரருக்கு ஆட்டநாயகன் விருது வழங்கியது போல, துப்பாக்கி சுடும் போட்டியில் தோட்டாவை பறித்து விட்டு போட்டியில் ஜெயித்து காட்டு என்று சவால் விடுவது போல, வாக்காளர்களின் ஓட்டுரிமையை எஸ்.ஐ.ஆர். மூலம் பறித்துவிட்டு.

எங்கே இப்போது ஜெயித்துக் காட்டு என ஏகத்தாளம் செய்கின்றனர். இந்த சூழ்ச்சியை நாம் தாண்டி வர வேண்டுமானால் ஓட்டுப் பெட்டியில் தமிழ்நாட்டில் விழுகின்ற ஒவ்வொரு ஓட்டும் உதயசூரியனுக்கு விழ வேண்டும். தமிழ் மானம், தமிழர் மானம், பெரியார் மானம், அண்ணா மானம், கலைஞர் மானம்,

எம்.ஜி.ஆர். மானம், ஸ்டாலின் மானம், உதயநிதி மானம், ஏனைய அனைத்து அரசியல் தலைவர்கள் மானம் காப்பாற்றப்பட வேண்டுமானால் ஆறரை கோடி வாக்காளர்களும், 75 ஆண்டுகளாக நம் ஊனோடும் உயிரோடும் கலந்த கழகத்துக்கு உதயசூரியனுக்கு வாக்களித்து இந்தியா முழுவதும் சமநீதி, சமதர்மம்.. பெண் விடுதலை அனைத்தும் தழைத்திட வழி செய்யுங்கள் வாக்காளப் பெருமக்களே!

என்றும் தமிழ் உணர்வுடன் உங்கள்



**வி.சி.குகநாதன்**
திரைப்பட இயக்குநர்

---



சென்னை மேற்கு மாவட்டம்,சேப்பாக்கம் பகுதிக்குட்பட்ட அனைத்து வட்டத்தில் உள்ள வாக்குச்சாவடிகள் முன்பும் பகுதி கழக செயலாளர் மண்டலக் குழுத் தலைவர் எஸ்.மதன் மோகன் முன்னிலையில் புதிய வாக்காளர் சேர்த்தல் பெயர் நீக்குதல் திருத்துதல் சிறப்பு முகாம் நடைபெற்றது.இந்நிகழ்வில் வட்டக் கழக செயலாளர்கள் ஆர்.ஜெகதீசன்,கே.மகேஷ் மற்றும் இளையராஜா, பாலச்சந்தர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், பாக முகவர்கள் (BLA2), பாக உறுப்பினர்கள் (BLC) பங்கேற்றனர்.




மாதவரம் 32-வது வட்டத்தில் மாவட்டக் கழகப் பிரதிநிதி சிவில் எம்.செல்வம் ஏற்பாட்டில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவை மண்டலக் குழுத் தலைவர் எஸ்.நந்தகோபால் வழங்கினார். உடன் பகுதி கழகச் செயலாளர் ஜி.துக்காராம், மாமன்ற உறுப்பினர் ஏழுமலை, வட்டச் செயலாளர் எம்.சரவணன், டி. சுந்தரம், துரை, ஸ்ரீராமுலு, பக்தன், தேவன், சுந்தர்ராஜன், கௌதம், பாலாஜி, எஸ்.என்.கோதண்டன், ரவிச்சந்திரன், சி.கே.கோபால், ஈ. மோகன், ஹேமாவதி வேலுச்சாமி, சாரதி நகர் முருகன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம்.பி. முனுசாமி
### டிசம்பர் 29 (2016)



கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டவர்.

ஒன்றுபட்ட தருமபுரி மாவட்ட அவைத்தலைவராகப் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

1980ல் பாலக்கோடு சட்டமன்றத் தொகுதியில், கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

ஊராட்சி மன்றத் தலைவராகவும், விவசாய வேளாண்மை கூட்டுறவு சங்கத் தலைவராகவும், தருமபுரி மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை இயக்குநராகவும், நிலவள வங்கி இயக்குநராகவும் பதவி வகித்தவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### செஞ்சி கிழக்கு ஒன்றியத்தில்

# வாக்காளர் பட்டியல் சிறப்பு முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. ஆய்வு!

*செஞ்சி டிச 29-*

*விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் மேற்கொள்ளப்பட்ட எஸ் ஐ ஆர். பணியில்பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்டன. இதைத் தொடர்ந்து வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 19ஆம் தேதி வெளியிடப்பட்டது.கணக்கெடுப்பு பணிக்கு முன்பு செஞ்சி தொகுதியில் 2,60,622வாக்காளர்கள் இருந்தனர். வரைவு வாக்காளர் பட்டியலில் 2,34,920பேர் இடம் பெற்றுள்ளனர்.பட்டியலில் இருந்து 25 ஆயிரத்து 702 பேர்நீக்கப்பட்டுள்ளனர்.*

*புதிய வாக்காளர் பெயர் சேர்ப்பு முகவரி மாற்றம் நீக்கம் தொடர்பான கோரிக்கைகளுக்கு மனு அளிக்க 2026 ஜனவரி 18ஆம் தேதி வரை கால அவகாசம் உள்ளது.இதற்காக நேற்று 27ஆம் தேதியும், இன்று 28ஆம் தேதியும்,ஜனவரி 3 ,4 ஆகிய தேதிகளில் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளது இதில் எஸ்.ஐ.ஆர்ல் பெயர் விடுபட்டவர்கள், புதிய வாக்காளர்கள் சேர்த்ல், நீக்கம் ,முகவரி மாற்றம் ,தொடர்பான மனு க்களைவாக்காளர்கள் வழங்கலாம்என்றும்மேலும் 1.1.2026 அன்று 18 வயது பூர்த்தியடைந்த வர்கள் படிவம் 6 பெற்று தேவையான ஆவணத்ததின் நகல் இணைத்து வழங்கலாம்என தேர்தல் ஆணையம் அறிவித்ததை அடுத்து அதன்படி நேற்று முதல் வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது.*


*அதன்படிவிழுப்புரம் வடக்கு மாவட்டம்செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி கிழக்கு ஒன்றியம் கோணை ஊராட்சி அப்பம் பட்டு,கவரை ஊராட்சி கடகம் பூண்டி,மாத்தூர் திருகை , புலி வந்தி, அத்தியூர்ஆகிய ஊராட்சிகளில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் திருத்த சிறப்பு முகாமினை விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம் எல்ஏ நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது வாக்காளர் பட்டியலில் பெயர் இடம் பெறாமல் உள்ள தகுதியான வாக்காளர்கள் அனைவரும் முகாம்களில் தங்கள் பகுதியில் உள்ள ஓட்டு சாவடி மையங்களில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து வாக்குச்சாவடி அலுவலரிடம் ஒப்படைக்க வேண்டும்என அவர் தெரிவித்தார்.*

*ஆய்வின்போது செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார்,ஒன்றிய கவுன்சிலர் மணி, செஞ்சி கிழக்கு ஒன்றிய அவை தலைவர் ஆறுமுகம், ஒன்றிய துணை செயலாளர் குமார், மாவட்ட பிரதிநிதி அய்யா துரை,நிர்வாகிகள் காந்தி, வெங்கடேசன்,மணிபாலன், ,வீரப்பன், கருணாநிதி, சக்திவேல், குப்பன், செல்வகுமார்உள்ளிட்ட நிர்வாகிகள்கலந்து கொண்டனர்,*

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மிசா வ. துரை
### டிசம்பர் 29 (1994)



தனது இளமைக் காலம் முதலே கழகக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

முப்பது ஆண்டுகள் தொடர்ந்து திண்டிவனம் நகரக் கழகச் செயலாளராகவும் – பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளரப் பாடுபட்டவர்.

கழகத்திற்குச் சோதனை வந்தபோது உறுதி குலையாமல் கழகப் பணியாற்றியவர்.

நெருக்கடி காலத்தில் ‘மிசா’ கைதியாக ஓராண்டு சிறைவாசம் அனுபவித்ததோடு, கழகம் அறிவித்த சட்ட நகல் எரிப்புப் போராட்டம், இலங்கைத் தமிழர் ஆதரவு என அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**